Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, ஜூலை 24, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 10

## உலகத்திலேயே சிறந்த மனித வளம் மிக்க மாநிலமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்பது முதல்வர் முக ஸ்டாலினின் இலக்கு: ஆய்வுக் கூட்டத்தில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேச்சு

மதுரை ஜூலை 24 2021: மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மதுரை தேனி திண்டுக்கல் சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களை சார்ந்த பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன், பொதுவாக நிதி மேலாண்மையும், ஆளுமையும் நல்லாட்சியும் ஒன்றாக செயல்பட வேண்டும். நிதியை தேவையான அளவில் ஈட்டுவது அதனை முறையாக ஈட்டுவது யாரிடமும் இருந்து எவ்வளவு நிதி ஈட்ட வேண்டும் இதனை சரியாக செயல்படுத்துவதுதான் அரசாங்கத்திற்கு அழகு. துறை அமைச்சர் தெரிவித்தபடி அடிப்படை பொருளாதாரம் படித்தால் மூலதனச் செலவு எந்தெந்த மாநிலம் அதிகமாக்குகிறதோ, அந்தந்த மாநிலங்களில் வளர்ச்சி இருக்கும். இந்த துறையை பொறுத்தவரை சாலைகள், சிறு துறைமுகங்கள், கட்டடங்கள் ஆகியவற்றில் ஏற்படும் வளர்ச்சி தனியார் முதலீடு ஆகியவை வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரத்தை அதிகரிக்கும். உற்பத்தி திறன் அடிப்படையில் 14வது நிதிக்குழு, இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய தணிக்கை குழு ஆகியவை ஒரு பொதுவான கருத்தை முன்வைத்துள்ளது. 2016-2021 கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசின் வருமானம் உற்பத்தியில் 10 சதவீதமாக இருந்தது. 6.5 சதவீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. திமுக தலைவர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் 11.5 சதவீதமாக இருந்த வருமானம் தற்போதைய காலகட்டத்தில் 7.5 சதவீதமாக குறைந்துவிட்டது. கொரோனா காலத்தில் 6.5 சதவீதமாக குறைந்துவிட்டது. சுமார் 70,000 முதல் 80 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் வர வேண்டி உள்ளது. இது குறித்து விரிவாக வெள்ளை அறிக்கையில் வெளியிடப்படும். எந்தெந்த துறைகளில் இருந்து எவ்வளவு தரவேண்டும் என்பது அரசியல் காரணங்களுக்காக எடுக்கப்படுவது அல்ல. நிதி ஆதாரங்களை திருத்துவதன் மூலம் பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்ற முடியும் உதாரணமாக 80,000 கோடி என்பது நிதிநிலையில் ஊரக வளர்ச்சித்துறை, மாநகராட்சி துறை கல்வி ஆகிய மூன்று துறைகளுக்கும் சேர்த்து செய்யப்படும் செலவினம் ஆகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்த மூலதன செலவு ஒரு லட்சம் கோடி கூட செலவிடவில்லை அதாவது வருடத்திற்கு இருபத்தி ஐந்தாயிரம் கோடி கூட செலவிடவில்லை. நல்லாட்சியின் அடையாளம் என்பது உற்பத்தியில் 3 சதவிகிதம் முதலீடு செய்ய வேண்டும் .ஆனால் கடந்த வருடம் உற்பத்தியில் 1.5 சதவீதம் கூட செய்யவில்லை. அதனால் கூடுதலாக 30 ஆயிரம் கோடி முதல்



40,000 கோடி வரை மூலதன செலவு செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இதுவரைக்கும் செய்ததைவிட இரண்டு மடங்கு செய்ய வேண்டும் கூடுதல் சாலை, விவசாயம், குடிநீர் துறைமுகங்கள் விமான நிலைய விரிவாக்கம் உள்ளிட்ட பணிகள் செய்திட வேண்டும். இதனை செய்தால்தான் வளர்ச்சியில் தெளிவான பாதையில் செல்ல முடியும். முதலமைச்சர் தெளிவாக சொல்லியிருக்கிறார் இந்தியாவிலேயே ஏன் தென் கிழக்கு ஆசியாவிலேயே மூலதனம் செய்யக் கூடிய இடமாக தமிழ்நாடு திகழவேண்டும். உலக அளவில் மனித வளம் மிகுந்த மாநிலமாக இங்கிருந்து பல்வேறு நாடுகளுக்கு செல்பவர்கள் சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்களாக மாற்றும் வகையில் அந்த அளவில் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும் என்பதுதான் என்பது இலக்கு. இதற்காக பல அடிப்படைத் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் அத்தகைய திருத்தங்களை கொண்டு வர தயாராக இருக்கிறோம் என முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார். உலகத்திலேயே சிறந்த பொருளாதார நிபுணர்கள் வைத்து அமைக்கப்பட்ட குழு கூட்டத்தில் இதனை முதல்வர் தெரிவித்திருக்கிறார். அதற்கெல்லாம் இதுபோன்ற ஆய்வுக் கூட்டங்கள் மிகவும் முக்கியமானவை மூலதன செலவை இரண்டு மடங்கு ஆக்கிட வேண்டும் அதற்கு நிதி எந்த அளவிற்கு முக்கியமோ அதைவிட முக்கியம் வரக்கூடிய வருமானத்திற்கு சரியான முறையில் சரியான நேரத்தில் செயல்களுடன் அவை செலவிடப்பட வேண்டும் . அந்த அடிப்படையில் துறையின் அமைச்சர் மீது எனக்கு முழு நம்பிக்கை உண்டு. எங்கள் கட்சியில் இயக்கத்தின் சரியான செயல் வீரராக இருக்கக் கூடியவர் சரியான விஷயங்களை சரியான நேரத்தில் முடித்துக் கொடுப்பவர். அவரின் சீரிய மேலாண்மையில் இந்தத் துறை இருக்கிறது என்ற நம்பிக்கையோடு நிதி துறையின் சார்பில் செய்ய வேண்டியவைகளை செய்வோம் என கூறினார்.

## மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஒன்றிய சோழவந்தான் வாடிப்பட்டி பேரூர் பகுதிகளுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிமுக நிர்வாகிகள் முன்னாள் அமைச்சர் உதயகுமாரை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

மதுரை ஜூலை 24 2021: மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் வாடிப்பட்டி தெற்கு மற்றும் வடக்கு ஒன்றிய கழகங்களுக்கும் வாடிப்பட்டி பேரூர் மற்றும் சோழவந்தான் பேரூர் கழகத்திற்கு அதிமுகவில் புதியதாக நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளராக கொரியர் கணேசன் வடக்கு ஒன்றிய செயலாளராக வாடிப்பட்டி காளிதாஸ் வாடிப்பட்டி பேரூர் கழக செயலாளராக ராஜேஷ் கண்ணன் சோழவந்தான் பேரூர் கழக செயலாளர் முருகேசன் மேற்கு ஒன்றிய செயலாளர் முருகேசன் ஆகியோர்களை சமீபத்தில் புதிய நிர்வாகிகளாக அதிமுக தலைமை கழகம் சார்பாக சமீபத்தில் நியமிக்கப்பட்டனர்.



புதிய நிர்வாகிகள் அனைவரும் முன்னாள் அமைச்சரும் மதுரை புறநகர் மேற்கு மாவட்ட செயலாளருமான ஆர் பி உதயகுமார் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர். இதில் பொதுக்குழு உறுப்பினர் நாகராஜன் மாவட்ட கவுன்சிலர் ஜெயக்குமார் இளைஞரணி ஒன்றிய செயலாளர் தண்டபாணி ஒன்றிய துணைச் செயலாளர் துரை புஷ்பம் வழக்கறிஞர் மன்னாடிமங்கலம் முருகன் நிர்வாகிகள் கச்சிராயிருப்பு முனியாண்டி மேலமடையான் ராமர் தென்கரை இராமலிங்கம் திருவேடகம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சிபிஆர் மணி ஒன்றிய கவுன்சிலர் தங்கப்பாண்டி சோழவந்தான் பேரூர் கழக நிர்வாகிகள் கேபிள் மணி வணங்காமுடி தியாகு சூர்யா ஜூஸ் கடை கென்னடி ஜெயபிரகாஷ் ராஜா பேட்டை முத்துக்குமார் மாரிச்சாமி மேலச்சேரி ராஜேந்திரன் டீக்கடை ராஜேந்திரன் டிரைவர் மணி பாசறை நாகராஜன் இலக்கிய அணி மணி கருப்பட்டி கருப்பையா வாடிப்பட்டி பாலா மணிமாறன் தேனூர் பாஸ்கரன் வயலூர் பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திண்டிவனத்தில் பல ஆண்டுகளாக பாழடைந்து கிடந்த பேருந்து நிலையம் உடைக்கும் பணி துவங்கியது

திண்டிவனம், ஜூலை 24 2021: திண்டிவனம் இந்திராகாந்தி பேருந்து நிலையம் பழுதடைந்த நிலையில் கட்டிடத்தை உடைத்தெடுக்கும் பணி தொடங்கியது. விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தின் மையப்பகுதியில் இந்திராகாந்தி பேருந்து நிலையம் அமைந்துள்ளது. இந்த பேருந்து நிலையத்தில் திண்டிவனம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தினமும் நூற்றுக்கணக்கானோர் வந்து செல்கின்றார்கள். இந்த பேருந்து நிலையத்தில் இருந்துதான் பல்வேறு கிராமங்களுக்கு செல்கின்ற அரசு மற்றும் தனியார் பேருந்துகள் வந்து பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்லுகின்றது. இந்நிலையில் இந்த பேருந்து நிலையம் பல ஆண்டுகளாக சிதிலமடைந்து காணப்பட்ட நிலையில், இந்த பேருந்து நிலையத்தை உயிர்பலி ஏற்படும் முன்பு உடைத்து எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் கடந்த இரு தினங்களாக இந்த பேருந்து நிலையத்தை நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் உடைத்து எடுக்கும் பணியின் முதல் கட்டமாக அதில் இருந்த கடைகளை நகராட்சி



நிர்வாகத்தினர் காலி செய்ய உத்தரவிட்டனர். இதனால் அங்கு கடை வைத்திருந்த கடை உரிமையாளர்கள் கடைகளை காலி செய்தனர். பின்பு பேருந்து நிலைய கட்டிடத்தில் இருக்கின்ற ஜன்னல் மற்றும் கதவுகளை நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் உடைத்து எடுக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

## ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் தயாரிப்பிற்கு மேலும் கால நீட்டிப்பு வழங்கக் கூடாது

சென்னை, ஜூலை 24 2021: தமிழகத்தில் கொரோனா நோய்ப்பரவல் உச்சத்தில் இருந்தபோது, நோயாளிகளின் சிகிச்சைக்கு தேவையான மருத்துவ ஆக்சிஜனுக்கு கடுமையான பற்றாக்குறை இருந்தது. அந்த நேரத்தில், ஸ்டெர்லைட் போட்ட மனுவின் மீது உச்சநீதிமன்றம் தமிழக அரசின் கருத்தை கேட்டது. அதற்காக நடந்த அனைத்து கட்சி கூட்டத்தில், சிகிச்சைக்கு தேவையான அளவில் கூடுதலான ஆக்சிஜனை தயாரிப்பதற்காக மட்டும் தூத்துக்குடி ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு தற்காலிக அனுமதி வழங்கலாம் என்று அரசு தரப்பில் ஆலோசனை வைக்கப்பட்டது. ஸ்டெர்லைட்டின் கடந்த கால மோசமான நடவடிக்கைகள், போராடிய மக்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூடு போன்றவற்றையும் நினைவுபடுத்தி, அதே சமயம் கொரோனா பேரிடரின் பின்னணியில் ஒட்டு மொத்த தமிழக நலனை கணக்கில் எடுத்து, அரசின் ஆலோசனைக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டது. அதன்படி ஜூலை 31 வரையிலான காலத்திற்கு ஸ்டெர்லைட் தொழிற்சாலையில் ஆக்சிஜன் தயாரிக்க மட்டும் தற்காலிகமாக அனுமதி அளிக்கப்பட்டது. அன்றைய நிலையில் தமிழகத்தில் மொத்தம் 230 மெட்ரிக் டன் என்ற அளவில் ஆக்சிஜன் உற்பத்தி இருந்தது. அதற்கு பிறகு உற்பத்தி படிப்படியாக உயர்த்தப்பட்டு தமிழகத்தில் ஆக்சிஜன் தயாரிப்பின் அளவு 650 மெட்ரிக் டன்னாக உயர்ந்து உள்ளது. தமிழகத்திற்கு தேவையான ஆக்சிஜன் போதுமான அளவில் இப்போது கையிருப்பில் உள்ளதாக அண்மையில் தமிழக சுகாதாரத்துறை அமைச்சரும் தெரிவித்திருக்கிறார்.

எனவே, தூத்துக்குடி ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு ஜூலை 31 வரையிலும் வழங்கப்பட்ட தற்காலிக அனுமதியை மேலும் காலநீட்டிப்பு செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும், அதற்கு பிறகு அத்தொழிற்சாலையில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ள தமிழக அரசு அனுமதி அளிக்கக் கூடாது எனவும், ஆலையை பூட்டி சீல் வைக்க வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு வலியுறுத்துகிறது.

## திண்டிவனம் அருகே இளம்பெண் மீது பைக்கால் மோதி ஸ்கூட்டியை பறித்துச் சென்ற மர்ம நபர்களுக்கு போலீஸ் வலை

திண்டிவனம், ஜூலை 24 2021: திண்டிவனம் அருகே ஸ்கூட்டியில் சென்ற இளம் பெண் மீது மோதி விட்டு, ஸ்கூட்டியை பறித்து சென்ற சம்பவம் குறித்து எஸ்.பி., நேரில் விசாரணை நடத்தினார். திண்டிவனம் அடுத்த மங்கலம் கிராமத்தை சேர்ந்தர் ராமலிங்கம் மகள் பத்மாவதி, (21). இவர் சலவாதி பகுதியில் உள்ள தனியார் ஒட்டலில் காசாளராக பணியாற்றி வருகிறார். கடந்த 20ம் தேதி பணியை முடித்து விட்டு, ஸ்கூட்டியில் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். ஈச்சேரி சாலையில் டாஸ்மாக் கடை அருகில் சென்றபோது, அவரை பின்தொடர்ந்து வந்த மர்ம நபர்கள் இருவர், பைக்கல் மோதியுள்ளனர். இதில் நிலை தடுமாறி கீழே விழுந்த பத்மாவதியின் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு தலைமறைவாகி விட்டனர். இது குறித்து பத்மாவதி ஒலக்கூர் போலீசில் புகார் செய்தார். அதன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து, பெண்ணின் ஸ்கூட்டியை திருடிய ஆசாமிகளை தேடி வருகின்றனர். நேற்று முன்தினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநாதா நேரில் சென்று அந்த



பெண்ணிடம் விசாரணை நடத்தினார். மேலும், சரக்கு திருடு போன டாஸ்மாக் கடையையும் அவர் பார்வையிட்டார். இரு சம்பவங்களிலும் குற்றவாளிகளை விரைந்து பிடிக்க ஒலக்கூர் போலீசாருக்கு உத்தரவிட்டார்.

## தேனீக்கள் கொட்டியதால் 4 வயது சிறுவன் உயிரிழப்பு

திண்டிவனம், ஜூலை 24 2021: திண்டிவனம் அருகே தேனீக்கள் கொட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பள்ளி சிறுவன் உயிரிழந்தான். கிருஷ்ணகிரி மாவட்டம் புலிங்குண்ட கிராமத்தை சேர்ந்தவர் முருகன், 40; இவர் சென்னை, ஓட்டேரியில் உள்ள தனஞ்செழியன் என்பவரின் வீட்டில் வாடகைக்கு தங்கி, அங்குள்ள ஸ்வீட் ஸ்டாலில் வேலை செய்து வருகிறார். இந்நிலையில், கடந்த 20ம் தேதி தனஞ்செழியன் சொந்த ஊரான திண்டிவனம் அடுத்த நடுவனந்தல் கிராமத்தில் கோவில் திருவிழா நடந்தது. இதில் கலந்து கொள்வதற்காக முருகன் தனது மகனான 4 வயது ஜீவிதன் என்பவரை அழைத்து வந்துள்ளார். திருவிழாவை முடித்து விட்டு, கடந்த 21ம் தேதி நடுவனந்தல் புதூரில் உள்ள தனஞ்செழியன் நிலத்திற்கு சென்ற போது, அங்கு மாமரத்தில் இருந்த தேனீக்கள், ஜீவிதனை கொட்டியதில் மயக்கமடைந்தார். அவரை பொது மக்கள் மீட்டு சிகிச்சைக்காக திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கிருந்து ஜீவிதன் மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இது குறித்து வெள்ளிமேடுப்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அகரம் கிராமத்தில் அட்மா திட்டத்தில் மணிலா மற்றும் எள் பயிர் பயிர்சாகுபடி குறித்த பயிற்சி முகாம்

விருத்தாசலம் ஜீலை 24, 2021 : கடலூர் மாவட்டம், கம்மாபுரம் வட்டாரம் விருத்தாசலம் அருகிலுள்ள. ஊ.அகரம் கிராமத்தில் எள் மற்றும் மணிலா பயிர் சாகுபடி குறித்து பன்னை பயிற்சி நடைபெற்றது. பயிச்சியி முகாமிற்கு கம்மாபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுதமதி தலைமை தாங்கினார் . விருத்தாசலம் வேளான் அறிவியல் நிலைய விஞ்ஞானி நடராஜன் விவசாயிகளுக்கு பன்னை



பயிற்சி அளித்தார். பயிற்சி நடைபெறும் பயிற்சி முகாமில் மொத்தம் ஆறு நாட்கள் நேற்று 22 ந் தேதி முதல் நாள் பயிற்சியில் விதைப்பு மற்றும் விதை நேர்த்தி, களை எடுப்பு, நிர்வாகம் குறித்து விவசாயிகளுங்கு அளிக்கப்பட்டது. பயிற்சியில் துனை வேளாண்மை அலுவலர் முத்துசாமி உதவி வேளாண்மை அலுவலர் புவனேஷ்வரி வட்டாரதொழில் நுட்ப மேலாளர் தங்கதுரை உதவி தொழில் நுட்ப மேலாளர் செல்லமுத்து மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டன.

## பாலமேடு அருகே இலவச மருத்துவ முகாம்

அலங்காநல்லூர், மதுரை ஜீலை 24, 2021 : மதுரை மாவட்டம் பாலமேடு அருகே முடுவார்பட்டி ஊராட்சியில் உள்ள சமுதாய கூடத்தில் ராக்ஸ் மருத்துவமனை சார்பில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதற்கு ஊராட்சி மன்ற தலைவர் ஜெயமணி தலைமை தாங்கினார். துணை சேர்மன் சங்கீதா மணிமாறன்,



ஊராட்சி செயலர் செல்வமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மருத்துவர் மாலினி நோயாளிகளை பரிசோதனை செய்து மருந்து வழங்கினார். முகாமில் 100க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு கொரோனா, கருப்பு பூஞ்சை உள்ளிட்ட பரிசோதனைகள் செய்து இலவசமாக மருந்துகள் வழங்கப்பட்டன.

# சென்னை, கோயம்புத்தூர் உள்ளிட்ட 35 நகரங்களில் அரசு தனியார் பங்களிப்புடன் பல்முனை சரக்குப் போக்குவரத்து பூங்காக்கள் மாநிலங்களவையில் மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி

புதுதில்லி, ஜூலை 24, 2021: மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி மக்களவையில் எழுத்துப்பூர்வமாக இன்று அளித்த பதில்கள் பின்வருமாறு: பாரத் மாலா பரியோஜனா திட்டத்தின் கீழ் ரூ.5,35,000 கோடி செலவில் 10,000 கி.மீ தேசிய நெடுஞ்சாலைகள் வளர்ச்சி திட்ட சாலைகளுடன் கூடுதலாக 24,800 கிலோ மீட்டர் தொலைவிற்கு சாலைகளை அமைக்கும் பாரத்மாலா முதல்கட்ட திட்டத்திற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு கடந்த 2017-ஆம் ஆண்டு ஒப்புதல் அளித்தது. இது தவிர, நாடு முழுவதும் 35 பல்முனை சரக்குப் போக்குவரத்து பூங்காக்களை கட்டாயம் அமைக்குமாறும் அந்தக் குழு உத்தரவிட்டது. இதன்படி சென்னை, கோயம்புத்தூர் உள்ளிட்ட 35 நகரங்களில் அரசு- தனியார் பங்களிப்புடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னையைப் பொருத்தவரை இந்த திட்டத்திற்காக கண்டறியப்பட்டுள்ள 158 ஏக்கர் நிலப்பரப்பில், 122 ஏக்கர், சென்னை துறைமுக பொறுப்புக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 36 ஏக்கர்களை கையகப்படுத்தும் பணியில் மாநில அரசின் தமிழ்நாடு தொழில்துறை வளர்ச்சி கழகமான டிட்கோ ஈடுபட்டு வருகிறது. கோயம்புத்தூரில் இந்த திட்டத்தை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை/ ஆய்வு மற்றும் நிலத்தை கண்டறிவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த 35 பூங்காக்களை அமைப்பதற்கான ஏல ஆவணங்களை இறுதி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. விரிவான திட்ட அறிக்கை/ ஆய்வுகள் மற்றும் அனுமதி அளிக்கப்பட்ட ஏல ஆவணங்களின் அடிப்படையில் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும். தேசிய நெடுஞ்சாலைகளின் சுங்கச்சாவடிகளில் அனைத்து வழிகளும் ஃபாஸ்ட் டேக் வழிகளாக அறிவிப்பு: தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளின் அனைத்து வழிகளையும் ஃபாஸ்ட் டேக் வழிகளாக அரசு அறிவித்து, மின்னணு வாயிலாக கட்டணம் செலுத்தும் முறை பிப்ரவரி 15/16 நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது. தற்போது அனைத்து சுங்கச் சாவடிகளிலும் இந்த முறை பின்பற்றப்படுகிறது. 2021 பிப்ரவரி 14-ஆம் தேதி 80%ஆக இருந்த ஃபாஸ்ட் டேக்கின் பயன்பாடு, இந்த அறிவிப்பிற்குப் பிறகு 96%ஆக அதிகரித்துள்ளது. ஜூலை 14-ஆம் தேதி நிலவரப்படி கூடுதலாக 3.54 கோடி ஃபாஸ்ட் டேக்குகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 இன் கீழ் ஓட்டுனர் மற்றும் அவருக்கு அருகில் அமர்பவருக்கு காற்றுப்பை வசதியை ஏற்படுத்துவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகளின் பராமரிப்புப் பணியில் மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சிகள்: கொவிட்-19 தொற்றால் அறிவிக்கப்பட்ட தேசிய மற்றும் உள்ளூர் அளவிலான பொது முடக்கங்கள் மற்றும் கட்டுப்பாடுகளினால் பொருட்கள், இயந்திரம் மற்றும் தொழிலாளர்களின் இயக்கம் மற்றும் விநியோகம்/ பணியில் ஏற்பட்ட இடர்பாடுகளால் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்டன. எனினும் தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் ஒப்பந்ததாரர்கள்/ சலுகை பெற தகுதி பெற்றவர்கள்/ ஆலோசகர்களுக்கு போதிய உதவிகள் வழங்கப்பட்டதன் காரணமாக தேசிய நெடுஞ்சாலைகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி மற்றும் பராமரிப்புப் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளையும் தாண்டி நடைபெற்றன. 2020 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரை ரூ 26,322 கோடி மதிப்பில் 890 கிலோமீட்டர் தொலைவிற்கு 31 திட்டங்களை மேற்கொள்ள இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையகம் அனுமதி அளித்தது. மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 இன் கீழ், நாடு முழுவதும் மாசு கட்டுப்பாட்டில் உள்ள (பியூசி) சான்றிதழின் படிவத்தை அமைச்சகம் பொதுவானதாக வடிவமைத்துள்ளது. மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989, விதி 115(7) இன்படி, "மோட்டார் வாகனம் முதலில் பதிவு செய்யப்பட்டதிலிருந்து ஓர் ஆண்டு காலத்திற்குப் பிறகு இதுபோன்று ஒவ்வொரு வாகனமும் மாநில அரசின் அங்கீகாரம் பெற்ற முகமைகள் வழங்கும் மாசு கட்டுப்பாட்டில் உள்ள சான்றிதழைப் பெற வேண்டும்." இதற்காக அனைத்து மாநிலங்களில் உள்ள ஒவ்வொரு எரிவாயு நிலையங்களிலும் இதுபோன்ற மையம் அமைக்கப்படும். இந்த மையங்களில் அவ்வப்போது ஆய்வு செய்யுமாறு போக்குவரத்துத் துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விதிகளுக்கு உட்படாமல் முறைகேடுகளில் ஈடுபடும் மையங்களுக்கு மிக அதிக அபராதத்தை விதிக்குமாறும், அதுபோன்ற சமயங்களில் சம்பந்தப்பட்ட மையத்தின் அங்கீகாரத்தை ரத்து செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 12% மற்றும் 15% எத்தனால் கலவையை பெட்ரோலில் வாகன எரிபொருளாக பயன்படுத்துவது குறித்து அமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. மாசுக் கட்டுப்பாடு மற்றும் இறக்குமதி மீதான சார்பை குறைப்பதற்காக பெட்ரோலுடன் 20% எத்தனால் கலவையை சேர்ப்பதற்கான கால அளவை ஐந்து ஆண்டுகள் குறைத்து, 2025-ஆம் ஆண்டாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் எத்தனால் கலப்பிற்கான செயல்திட்டம் 2020-25-ஐ நிதி ஆயோக் தயாரித்துள்ளது. மின்சாரம் மற்றும் மாற்று எரிபொருட்களில் இயங்கும் வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக ஊக்கத் தொகைகளை அரசு வழங்கி வருகிறது.

# தமிழ்நாடு காங்கிரஸ் மனித உரிமைப்பிரிவு சைக்கிள்பேரணி சாத்தூரில் மாநிலத்தலைவர் மகாத்மா சீனிவாசனுக்கு உற்சாக வரவேற்பு



சாத்தூர், ஜூலை, 24 2021: மத்திய அரசின் சர்வாதிகாரப் போக்கையும், பெட்ரோல், டீசல், கேஸ் சிலிண்டர் விலைவாசி உயர்வை கண்டித்து சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை தமிழ்நாடு காங்கிரஸ் மனித உரிமைப்பிரிவு சார்பில் மாநிலத்தலைவர் மகாத்மா சீனிவாசன் தலைமையில் 56 நபர்கள் சைக்கிள் பேரணியாக சாத்தூர் வந்தடைந்தனர். நகர காங்கிரஸ் கமிட்டி சார்பாக தலைவர் டி.எஸ். அய்யப்பன் தலைமையில் ,விருதுநகர் மேற்கு மாவட்ட பொதுச்செயலாளர் எம்.ஜோதி நிவாஸ் சால்வை அணிவித்து வரவேற்றார். மாநில பொது செயலாளர் முருகன், கிழக்கு வட்டார காங்கிரஸ் தலைவர் சுப்பையா, ஒன்றிய செயலாளர் ரமேஷ் முன்னிலையில் சைக்கிள் பேரணிக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. பேருந்து நிலையம் முன்பாக மத்திய அரசை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது. விருதுநகர் மேற்கு மாவட்ட செயலாளர் சந்திரன், நகர பொருளாளர் சிந்தியப்பன், பூக்கடை கருப்பசாமி, விருதுநகர் மேற்கு மாவட்ட துணை தலைவர் ஆறுமுகம், சங்கரபாண்டியன், ஒன்றிய மாணவரணி தலைவர் மணிவண்ணன் ,அண்ணாநகர் இளங்கோவன் ,ஹரிகிருஷ்ணன், பரதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ஐஐடி மற்றும் ஐஐஎஸ்சி ஆகியவற்றின் கூட்டு முயற்சியான என்பிடிஇஎல் மின்சார வாகனங்கள், இன்டர்நெட் ஆஃப் திங்ஸ், வர்த்தகம் மற்றும் நிலையான அபிவிருத்தி குறித்த புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, ஜூலை 24, 2021 : கற்றல் குறித்த தேசிய திட்டம் (என்.பி.டி.இ.எல்), மின்சார வாகனங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ஐ.ஓ.டி, வணிக மற்றும் நிலையான மேம்பாட்டுக்கான வடிவமைப்பு, ஆகிய பாடத் திட்டங்களை ஜூலை 2021 செமஸ்டருக்கு ஸ்வயம் தளம் மூலம் வழங்குகிறது. என்.பி.டி.இ.எல் படிப்புகள் மாணவர்கள் தங்கள் வீட்டில் இருந்தபடியே கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கின்றன. ஜூலை - டிசம்பர் 2021 செமஸ்டருக்கான சேர்க்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. என்.பி.டி.இ.எல் படிப்புகளின் முதல் தொகுப்பில் சேர கடைசி தேதி 2021 ஆகஸ்ட் 2 ஆகும். இது ஐ.ஐ.டி மற்றும் ஐ.ஐ.எஸ்.சி. பேராசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது. மாணவர்கள் மூலம் என்.பி.டி.இ.எல் படிப்புகளில் சேரலாம். ஆன்லைன் முறையில் நாடு முழுவதும் உள்ள மாணவர்களுக்கு 500க்கும் மேற்பட்ட படிப்புகளை, என்.பி.டி.இ.எல் முற்றிலும் இலவசமாக வழங்குகிறது. யார் வேண்டுமானாலும் எங்கும், எந்த நேரத்திலும் கற்கக்கூடிய சாத்தியம், கற்பித்தல்-கற்றல் செயல்முறையை மாணவர்களை மையமாகக் கொண்டதாகவும், புதுமையானதாகவும் ஆக்கியுள்ளது. இந்த ஆன்லைன் கல்வி முறை சிளிக்ஷிமிஞி-19 தொற்றுக் காலத்தில் மிகவும் பயனளிப்பதாக விளங்குகிறது. என்.பி.டி.இ.எல்-இன் தனித்துவமான அம்சங்களை எடுத்துரைத்த, ஐ.ஐ.டி மெட்ராஸின் என்.பி.டெல் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் விக்னேஷ் முத்துவிஜயன், "ஸ்வயம்-என்.பி.டெல் தற்போது நாடு முழுவதும் பொறியியல், கலை, அறிவியல், வர்த்தகம் மற்றும் மேலாண்மை ஆகிய துறைகளில் 4,000க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. இந்த நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கள் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்த என்.பி.டி.இ.எல் படிப்புகளில் சேர்கின்றனர். என்.பி.டி.இ.எல் இயங்குதளத்தில் பிரபலமான சில படிப்புகள், பொறியாளர்களுக்கான டேட்டா சயன்ஸ், பைத்தான், இல் நிரலாக்கத்திற்கான படிப்புகள், மெஷின் லர்னிங் அறிமுகம், மென்திறன்கள், ப்ராஜக்ட் ப்ளானிங் அண்ட் கன்ட்ரோல் ஆகியவை அதிக அளவில் விரும்பப்படுகின்றன" என்று கூறினார். என்.பி.டி.இ.எல், கள் வடிவத்தின் மூலம் சான்றிதழ் படிப்புகளை வழங்குகிறது. மாணவர்கள், ஆன்லைனில் வீடியோக்களைப் பார்த்துப் புரிந்து, வாராந்திர/ மாதாந்திர அடிப்படையில் பணிகளைச் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் விரும்பினால் இறுதித் தேர்வுக்கும் பதிவு செய்து கொள்ளலாம். சான்றிதழ் பெற, திட்டமிடப்பட்ட நேரடித் தேர்வில் பங்குபெற குறைந்த அளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மாணவர்கள் என்.பி.டி.இ.எல் சான்றிதழ் தேர்வை முடித்தவுடன், அவர்கள் பயிலும் கல்வி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தால், தங்கள் கூடுதல் புள்ளிகளை இணைக்குமாறு கோரலாம். பொறியியல், மனிதநேயம், அடிப்படை அறிவியல் மற்றும் மேலாண்மை போன்றவற்றில் பல்வேறு வகையான படிப்புகள் என்.பி.டி.இ.எல் தளங்களில் கிடைக்கின்றன. இது வரை 1.4 கோடிக்கும் அதிகமானோர் பதிவு செய்துகொண்டுள்ளனர். என்.பி.டி.இ.எல் வீடியோக்களை இதுவரை ஒரு பில்லியனுக்கும் அதிகமானோர் பார்த்துள்ளனர். மேலும், இல் என்.பி.டி.இ.எல் சேனல்கள் 3.1 மில்லியனுக்கும் அதிகமான சந்தாதாரர்களைக் கொண்டுள்ளன. மாணவர்களின் முயற்சிகளை நெறிப்படுத்துவதற்கும், ஒரு துறையில் நிபுணத்துவம் பெற அவர்களுக்கு வழிகாட்டுவதற்கும், என்.பி.டி.இ.எல் 'டொமைன் சான்றிதழ்' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது. ஒரு டொமைன் முக்கிய மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட என்.பி.டி.இ.எல் படிப்புகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது. டொமைன் சான்றிதழைப் பெறுவதில் கூடுதல் கட்டணங்கள் எதுவும் இல்லை. இப்போது 12 பிரிவுகளில் 51 களங்கள் உள்ளன, மேலும் 85 மாணவர்கள் -இன் டொமைன் சான்றிதழை இது வரை பெற்றுள்ளனர். என்.பி.டி.இ.எல் மூலம் பயில, வயது ஒருபோதும் தடையாக இருந்ததில்லை. மகாராஷ்டிராவின் நந்தேடில் உள்ள சாவித்ரிபாய் பூலே உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 15 வயது மாணவர் ஹர்ஷ்வர்தன் பாட்டீல், என்.பி.டெல் மூலம் பயின்றவர்களில் மிகவும் இளம் மாணவர். இதில் இவர், எஃபக்டிவ் ரைட்டிங், மென்திறன் மேம்பாடு, மன அழுத்த மேலாண்மை, உயிர் வேதியியல் மற்றும் போட்டித் தேர்வுகளுக்கான ஆங்கில மொழி ஆகிய ஐந்து சான்றிதழ் படிப்புகளை முடித்துள்ளார். ஆந்திராவின் கடப்பாவைச் சேர்ந்த என்.பி.டெல் மாணவி, சிங்கம் நிர்மலா தேவி, "என்.பி.டெல் மூலம் பைத்தான் படித்தது எனக்கு ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் மென்பொருள் பொறியாளராக வேலை பெற மிகவும் உதவியாக இருந்தது. இந்த படிப்பு மூலம், பைத்தானின் கருத்துக்களை என்னால் எளிதில் புரிந்து கொள்ள முடிந்தது, மேலும் நேர்காணலில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க முடிந்தது." என்று கூறுகிறார். 2003 ஆம் ஆண்டில் பெங்களூரில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஏழு இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களில் (பம்பாய், டெல்லி, கான்பூர், கரக்பூர், மெட்ராஸ், குவஹாத்தி மற்றும் ரூர்க்கி) என்பிடெல் தொடங்கப்பட்டது.

# புதிய ப்ளெக்ஸி கேப் பண்டை அறிமுகப்படுத்தும் நிப்பான் இந்தியா மியூச்சுவல் பண்ட் நிறுவனம்



சென்னை, ஜூலை 24, 2021: நிப்பான் இந்தியா மியூச்சுவல் பண்டின் சொத்து மேலாண்மை நிறுவனமாகிய நிப்பான் லைஃப் இந்தியா அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனம் தனது புதிய ப்ளெக்ஸி கேப் பண்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இது முழுவதும் சந்தை மூலதனம் உள்ள வாய்ப்புகளைப் பெறுவதற்கான தீர்வை வழங்கும் ஒரு திறந்தநிலை டைனமிக் ஈக்விட்டி திட்டமாகும். கவர்ச்சிகரமான பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நிறுவனங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் ஒரு நீண்ட கால மூலதன வளர்ச்சியை உருவாக்க நிப்பான் இந்தியா ஃப்ளெக்ஸி கேப் ஃபண்ட் திட்டமிட்டுள்ளது. இந்த புதிய நிதி சலுகை (என்எஃப்ஒ) 2021 ஜூலை 26 ஆம் தேதி திறந்து 2021 ஆகஸ்ட் 9 ஆம் தேதி நிறைவடைகிறது, மேலும் இந்த நிதி நிஃப்டி 500-இன் மொத்த வருவாய் குறியீட்டுக்கு எதிராக தரப்படுத்தப்படும். குறைந்தபட்ச முதலீடாக ரூபாய் 500 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, அதன் பின்னர் ரூ 1 இன் மடங்குகளில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்யலாம். அதிக வளர்ச்சி வாய்ப்புகளை அடையாளம் காண கீழ்நிலை பங்கு தேர்வு மற்றும் பொருத்தமான ஒதுக்கீடு அணுகுமுறை மூலம் முதலீட்டை பெருக்க இந்த நிதி திட்டம் முயற்சிக்கும். நிப்பான் இந்தியா மியூச்சுவல் ஃபண்ட் என்பது இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் அனுபவம் வாய்ந்த பங்கு ஆராய்ச்சி குழுக்களில் ஒன்றாகும். புதிய நிதி திட்ட அறிமுகம் குறித்து பேசிய நிப்பான் இந்தியா மியூச்சுவல் ஃபண்டின் இணை தலைமை வணிக அதிகாரி திரு சவுகத்தா சாட்டர்ஜி கூறுகையில், எங்கள் பரந்த அளவிலான முதலீட்டாளர்களை மையமாகக் கொண்ட தயாரிப்புகளுடன் இன்று நிப்பான் இந்தியா ஃப்ளெக்ஸி கேப் ஃபண்டும் இணைக்கிறது, மேலும் முதலீட்டாளர் சமூகத்திற்கான எங்கள் பங்களிப்பை இன்னும் விரிவுபடுத்துகிறது. ஃப்ளெக்ஸி கேப் ஃபண்ட் ஈக்விட்டி சந்தையில் மிகப்பெரிய வகைகளில் ஒன்றாகும். புதிதாக உருவாக்கப்பட்ட ஃப்ளெக்ஸி-கேப் பிரிவின் கீழ் நிர்வாகத்தின் கீழ் உள்ள மொத்த சொத்து ஜூன் மாத நிலவரப்படி ரூ .1.76 டிரில்லியனாக இருந்தது.நிப்பான் இந்தியா ஃப்ளெக்ஸி கேப் ஃபண்ட் மூலம், சந்தையின் சிறந்த பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் சிறந்த வருமானத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம் என்று கூறினார். நிப்பான் இந்தியா மியூச்சுவல் ஃபண்டின் ஈக்விட்டி முதலீடுகளின் தலைமை முதலீட்டு அதிகாரி மணீஷ் குன்வானி கூறுகையில், தற்போதைய சந்தை நிலை ஃப்ளெக்ஸி கேப் ஃபண்டுகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பை உருவாக்குகிறது என்று நாங்கள் நம்புகிறோம். ரு ஃப்ளெக்ஸி கேப் மூலோபாயம் மாறுபட்ட சந்தைக் காட்சிகளுக்கு ஏற்ப மாறும், இதனால் சந்தை சுழற்சிகளிலும் சிறப்பாக செயல்படும் திறன் உள்ளது. உலகளாவிய பொருளாதாரம் மதிப்பிடப்பட்டதை விட வேகமாக வளரும் என எதிர்பார்க்கப்படுவதால், தற்போதைய மேக்ரோ-பொருளாதார நிலைமைகள் ஃப்ளெக்ஸிகேப் வகைக்கு சாதகமானவை, குறைந்த வட்டி விகிதங்கள் மற்றும் பணப்புழக்க ஆதரவு மற்றும் வருவாய்களுடன் கேபக்ஸ் சுழற்சி எடுப்பது வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கும் போது மேம்படும் என்று கூறினார். இந்த நிதியை நிப்பான் இந்தியா மியூச்சுவல் ஃபண்டின் ஈக்விட்டி முதலீடுகளின் தலைமை முதலீட்டு அதிகாரி மணீஷ் குன்வானி, த்ருமில் ஷா, வருண் கோயங்கா மற்றும் நிகில் ருங்க்தா (இணை நிதி மேலாளர்), கின்ஜால் தேசாய், வெளிநாட்டு நிதி மேலாளர் ஆகியோர் நிர்வகிப்பார்கள்.

# சில்லரை மற்றும் மொத்த வியாபாரம் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவாக சேர்ப்பு மக்களவையில் தகவல்

புதுதில்லி, ஜூலை 24, 2021: சில்லரை மற்றும் மொத்த வியாபாரம் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவாக சேர்க்கப்பட்டுள்ளதாக மக்களவையில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் திரு நாராயண் ரானே தெரிவித்தார். 2021 ஜூலை 2ம் தேதி முதல் சில்லரை மற்றும் மொத்த விற்பனை வர்த்தகத்தை குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவாக மத்திய அரசு சேர்த்துள்ளது. கடந்த ஜூன் 26ம் தேதி வெளியிட்ட அறிவிப்பின் மூலம், தொழில் துறையில் செய்யும் முதலீடு மற்றும் வருவாய் அடிப்படையில் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் வகைப்பாட்டின் கூட்டு அளவுகோல் இருக்கும் என அரசு தெரிவித்திருந்தது. குறு,சிறு மற்றும் நடுத்தர தொழிலின் புதிய வகைப்பாடு அறிமுகம் மூலம், கடந்த 2020ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி முதல், புதிய இலவச ஆன்லைன் உதயம் பதிவு முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இது முந்தைய உத்யோக் ஆதார ஒப்பந்த தாக்கல் முறையை மாற்றியுள்ளது. குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் அமைச்சகத்தின் திட்டங்கள் மற்றும் பயன்களை பெற உதயம் பதிவு அவசியம். குறு, சிறு நிறுவனங்களுக்கு 3ம் நபர் உத்தரவாதமின்றி, எளிதாக கடன் வழங்கும் முறையை வலுப்படுத்த கடன் உத்திரவாத திட்டத்தை அரசு தொடங்கியது. இதன் மூலம் கடன் பெறும் உறுப்பு நிறுவனங்களுக்கு ரூ.200 லட்சம் வரை கடன் உத்திரவாதம் அளிக்கப்படுகிறது. இத்திட்டம் தொடங்கியதில் இருந்து 53,86,739 உத்திரவாதம் மூலம், ரூ. 2,72,007.42 கோடி அளவுக்கு கடன் உத்திரவாத திட்டத்தின் கீழ் கடன் அளிக்கப்பட்டுள்ளது. கீழ்கண்ட திட்டங்கள் மூலம் சிறு விவசாயிகள், தங்கள் வருவாயை பெருக்குவதற்கு, குடிசைத் தொழில் தொடங்க ஊக்குவிக்கப்படுகின்றனர். பிரதமரின் வேலைவாய்ப்பு உற்பத்தி திட்டம், மிகப் பெரிய கடன் மானிய திட்டம். இது சிறு தொழில்கள் மூலம் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வேளாண் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில், பருப்புகள் மற்றும் உணவு தானியங்கள் பதப்படுத்துதல் தொழில்கள், காய் கறி மற்றும் பழங்கள் பதப்படுத்தும் தொழில், கிராம எண்ணெய் தொழில், வனப் பொருட்கள் தொழில், மூலிகை தொழில், தேனி வளர்ப்பு உட்பட பல தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடங்கியதில் இருந்து கடந்த 9ம் தேதி வரை 6,97,612 சிறு தொழில்கள், விவசாயிகளால், ரூ.16688.17 கோடி மானியத்துடன் தொடங்கப்பட்டுள்ளன. கொவிட் காரணமாக குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டங்கள்: பிரதமரின் வேலைவாய்ப்பு உற்பத்தி/ கிராம வேலை வாய்ப்பு உற்பத்தி திட்டம்/ முத்ரா திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பலன்களை குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பெற முடியும் மற்றும் கொவிட் தொற்று காரணமாக பிரச்சினைகளை சந்தித்த குறு,சிறு நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்க இந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. பிரதமரின் வேலைவாய்ப்பு உற்பத்தி திட்டத்தின் கீழ், 2020-21ம் ஆண்டில் ஜூலை வரை 91,054 திட்டங்களும், 7,28,432 வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. உலகளவிலான வர்த்தகத்துக்கு செல்ல இ-வர்த்தக இணையதளம்: குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய சிறு தொழில்கள் கார்ப்பரேஷன், எம்எஸ்எம்இ உலகளாவிய சந்தை இணையதளத்தை வைத்துள்ளது. இதன் கீழ் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆன்லைன் பதிவு, இணைய கடை மேலாண்மை, பணம் செலுத்தும் முறைகள், வாடிக்கையாளர் உதவி போன்றவை கால் சென்டர்கள் மூலம் மேற்கொள்ளப்படுவது இந்த இணையதளத்தில் சிறப்பு அம்சங்கள். காதியின் தேன் திட்டம்:

தேன் உற்பத்தி திட்டத்தை, காதி மற்றும் கிராம தொழில் ஆணையம் கடந்த 2017-18ம் ஆண்டு தொடங்கியது. தேனீ வளர்ப்பு நடவடிக்கைகள், விவசாயிகள், ஆதிவாசிகள், மற்றும் வேலையற்ற கிராம இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்புகள் வழங்க இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது. இதுவரை 15,445 பேர், இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ், 29 தேனீ தொகுப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. தேனீ வளர்ப்போர் 13,388 பேர் ரூ.68.65 கோடி மத்திய அரசின் நிதியுதவியை பெற்றுள்ளனர்.

# இரண்டு நாள் பயணமாக பெங்களூரு சென்றுள்ளார் ராணுவ துணைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிபி மொஹந்தி

புதுதில்லி, ஜூலை 24, 2021: ராணுவ துணைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிபி மொஹந்தி, இரண்டு நாள் பயணமாக பெங்களூரு சென்றுள்ளார். இன்று (ஜூலை 22, 2021), உள்நாட்டு பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியாளர்களான டாட்டா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் நிறுவனம் மற்றும் அரூ தனியார் நிறுவனத்துடன் கலந்துரையாடினார். பீரங்கிகள் போன்ற வெடி பொருட்கள் சம்பந்தமான தளங்கள், மின்னணு உள்ளிட்ட பிரிவுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி குறித்து உற்பத்தியாளர்கள் விளக்கமளித்தனர். சிறப்பு குளிர்கால உடைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேம்பட்ட அம்சங்களையும் அவர் பார்வையிட்டார். இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் ஹெலிகாப்டர் பிரிவின் வளர்ச்சி நிலையையும் அவர் ஆய்வு செய்தார். ஜூலை 23 அன்று பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களான பாரத் மின்னணு நிறுவனம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதுடன், ஆகாஷ் ஏவுகணை, விண்வெளி தொலைத்தொடர்பு உபகரணங்கள் குறித்த செயல் விளக்கங்களையும் ராணுவ துணைத் தளபதி பார்வையிடுவார். இஸ்ரோ தலைவர் டாக்டர் கே சிவனையும் அவர் சந்தித்துப் பேசுவார்.

லார்சன் அன்ட் டூப்ரோ நிறுவனத்தின் பிராந்திய தலைவர்கள், பல்வேறு அமைப்பு முறைகள் குறித்து விளக்கமளிப்பார்கள். நகரின் முக்கிய பாதுகாப்பு தலைவர்களுடன் பலதரப்பு விஷயங்கள் குறித்து லெப்டினன்ட் ஜெனரல் சிபி மொஹந்தி உரையாற்றுவார். ஏவுகணைகள், செயற்கை நுண்ணறிவு, ரோபோடிக்ஸ் உள்ளிட்ட தொழில்நுட்பங்களில் அதிக கவனம் செலுத்தப்படும். பாதுகாப்பு துறையினருடனான கலந்துரையாடலின் போது 'ராணுவத் துறையில் தற்சார்பு' என்பதை கருப்பொருளாகக் கொண்டு ராணுவ துணைத் தளபதி உரையாடுவார்.

# ஓட்டுனரின் தூக்கக் கலக்கத்தால் சாலை தடுப்பு கட்டையில் மோதி நிலைதடுமாறி தலைகுப்புற கவிழ்ந்து விபத்துக்குள்ளானது



விழுப்புரம் ஜூலை 24, 2021: விழுப்புரம் மாவட்டம், அரசூர் அடுத்த பாரதி நகர் ஏரிக்கரை வளைவில் திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அதிகாலையில் திருச்செந்தூரில் இருந்து ஆந்திர மாநிலம், விஜயவாடாவிற்கு காய்கறிகள் ஏற்றிச் சென்ற லாரியானது, ஓட்டுனரின் தூக்கக் கலக்கத்தால் சாலை தடுப்பு கட்டையில் மோதி நிலைதடுமாறி தலைகுப்புற கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் லாரி ஓட்டுநர் படுகாயமடைந்தார். இதனால் திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# நீதிமன்றம் மற்றும் போலீசாரை கேவலப்படுத்தி பேசிய வழக்கில், நீதிமன்றத்தில் எச்.ராஜா ஆஜர்

புதுக்கோட்டை, ஜூலை 24 2021: நீதிமன்றம் மற்றும் போலீசாரை கேவலப்படுத்தி பேசிய வழக்கில், திருமயம் உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எச்.ராஜா இன்று ஆஜரானார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் புதுக்கோட்டை திருமயத்தில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில், பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா, மேடையில் பேச போலீசார் அனுமதி மறுத்தனர். இதனையடுத்து எச்.ராஜா போலீசாரையும், நீதிமன்றத்தையும் கடுமையாக விமர்சித்து பேசியிருந்தார்.

இதுதொடர்பாக, ஹெச் ராஜா மீது திருமயம் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கில் மூன்று ஆண்டுகளாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாத நிலையில், தந்தை பெரியார் திராவிடர் கழக வழக்கறிஞர் துரைசாமி, விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய போலீசாருக்கு உத்தரவிட கோரி உயர்நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார்.

இதனையடுத்து இரண்டு மாதத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன் பின்னும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாத நிலையில், உயர்நீதிமன்றத்தில் துரைசாமி நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்தார். இதனை அடுத்து, திருமயம் நீதிமன்றத்தில் போலீசார் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர்.

அதில் எச்.ராஜா தலைமறைவாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து, இந்த வழக்கில் எச்.ராஜா முன்ஜாமீன் வழங்க கோரி உயர்நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், இன்று திருமயம் உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எச்.ராஜா ஆஜராகியுள்ளார்.



# உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும் - ராகுல்காந்தி

சென்னை, ஜூலை 24 2021: பிரதமர் மோடியும், அமித்ஷாவும் இந்தியர்களுக்கு எதிராகவே பெகாசஸ் உளவு செயலியை பயன்படுத்தியதாக ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

